சார்ல்ஸ் “சிக்” ஷேவர்

# இப்போது நான் கிறிஸ்தவனாகிவிட்டேன்

## வாலிபர்களுக்கான அடிப்படை வேதபாடம்

வாலிபர்களுக்கான அடிப்படை வேதபாடம்
சார்ல்ஸ் "சிக்" ஷேவர்

பதிப்புரிமை © 2024
நசரீன் பப்ளிஷிங் ஹவுஸ்
இந்தப் பாடங்கள் நசரீன் யூத் இன்டர்நேஷனலால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மார்க் கில்ராய், பதிப்பாசிரியர்
ஜேனிஸ் ஜே.க்ரீனோ, துணை பதிப்பாசிரியர்

அனைத்து வேதவசனங்களும் தமிழ் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன

# பாடப் பங்காளருக்கான குறிப்புகள்

புதிய விசுவாசியுடன் சேர்ந்து வேலை செய்ததற்காக நன்றி!

வாரந்தோறும் 1 பாடத்தைக் கொடுக்கும் விதத்தில் இந்தப் பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியவற்றை அடுத்த கூடுகையில் கொடுக்க வேண்டும்.

### 1. இந்த வேதபாடங்களின் நோக்கம்

புதிய கிறிஸ்தவர்கள் ஒரு கிறிஸ்தவ நண்பரிடமிருந்து உதவியையும், வழிநடத்தலையும், உற்சாகத்தையும் பெற்றுக்கொள்ள உதவுவதுதான் இக்கையேட்டின் நோக்கம். அவர்களோடு இணைந்து தேவனுடைய வார்த்தையைப் படிப்பதும், ஜெபிப்பதும், அர்த்தமுள்ள விதத்தில் நேரம் செலவிடுவதும்தான் உங்களுடைய வேலை. அதைச் செய்ய இக்கையேடு உங்களுக்கு உதவும்.

### 2. சரியாகச் சந்தியுங்கள்

கூடிய விரைவில் புதிய கிறிஸ்தவரைச் சந்திக்க முயற்சி செய்யுங்கள். 24 மணிநேரத்திற்குள் சந்திப்பது மிகவும் நல்லது. இந்த நேரத்தை அவருடன் சேர்ந்து ஜெபிக்கப் பயன்படுத்துங்கள். பின்னர், பாடம் 1 மற்றும் மனப்பாட வசனம் 1 ஆகியவற்றை (தாளிலிருந்து வெட்டி எடுத்துக்) கொடுங்கள்.

### 3. ஒவ்வொரு பாடத்தையும் கற்றுக்கொடுக்க ஆயத்தம் பண்ணுங்கள்

ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே ஆய்வு செய்யுங்கள். சரியான விடைகள் அல்லது சில வசனங்களின் அர்த்தத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகம் இருந்தால், உங்கள் போதகர் அல்லது வாலிபர்களுக்கான தலைவருடன் அதைப் பற்றிப் பேச ஒரு நேரத்தைக் குறிக்கவும். புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் கேள்விகளை எழுத ஒவ்வொரு பாடத்திலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு உங்களால் பதில் கொடுக்க முடியவில்லை என்றால், அடுத்த கூடுகைக்கு முன்னர் உங்கள் போதகர் அல்லது வாலிபர்களுக்கான தலைவரை அணுகவும்.

### 4. தொடர்ந்து முறையாகக் கூடும் நேரத்தை ஏற்படுத்தவும்

அடுத்த எட்டு வாரங்களுக்குத் தொடர்ந்து கூடுவதற்கான நேரத்தையும், இடத்தையும் நியமித்துக் கொள்ளுங்கள். யாரேனும் ஒருவரின் வீட்டில் கூடுவது நல்லது. ஒவ்வொரு பாடபகுதியிலும், முந்தைய பாடத்தை மீண்டும் பார்த்து, அதன் மனப்பாட வசனத்தை மனனம் செய்திருக்கிறார்களா என்பதை உறுதி செய்த பின், அடுத்த பாடத்தையும் மனன வசனத்தையும் கொடுக்கவும். எட்டுப் பாடங்களுக்கும் இப்படியே செய்யவும்.

புதிய கிறிஸ்தவர் ஒரு பாடத்தை நிறைவு செய்யவில்லை என்றால், அவருடன் சேர்ந்து அதைப் படிக்க வைக்கவும்.

### 5. ஆவிக்குரிய வளர்ச்சியை உற்சாகப்படுத்துங்கள்

அவர்களுடைய ஆவிக்குரிய பயணத்தைப் பற்றி அறிய ஒவ்வொரு வாரமும் சற்று நேரமெடுக்கவும். "எண் ஆவிக்குரிய குறிப்பேடு" பகுதியில் அவர்களின் எண்ணங்களையும், தியானித்தவற்றையும் எழுதச் சொல்லவும். அவர்களுடன் சேர்ந்து ஜெபிக்க நேரமெடுக்கவும். புதிய கிறிஸ்தவருக்கும் பாடப் பங்காளருக்கும் இனிமையும், அக்கறையுமுள்ள ஒரு உறவு ஏற்படும்போது, இந்தப் பாடத்தொடர் சிறப்பாக அமையும்.

### 6. உங்கள் கூடுகையின் முன்னேற்றத்தைப் பதிவிடவும்

"முன்னேற்றப் பகுதியைப்" பயன்படுத்தவும். ஒவ்வொரு பாடபகுதிக்குப் பின்னரும் அதைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக. இதன் மூலம் குறிப்பிட்ட ஜெப தேவைகளை அறியலாம், மற்றும் உங்கள் போதகர் அல்லது வாலிபர்களுக்கான தலைவருக்கு புதிய கிறிஸ்தவரின் வளர்ச்சியைத் தெரிவிக்கலாம்.

### 7. இறுதிப் பாடம் நிறைவடைந்த பின்

- நீங்களும், உங்கள் போதகரும் (அல்லது வாலிபர்களுக்கான தலைவர்) கையொப்பமிட்ட பாராட்டுச் சான்றிதழைக் கொடுக்கவும். போதகர் சபை ஆராதனையின்போது உங்களோடு இணைந்து அதைக் கொடுக்கலாம்.
- உங்கள் போதகர் அல்லது வாலிபர்களுக்கான தலைவரிடம் முன்னேற்றப் பதிவை உறையிலிட்டுக் கொடுக்கவும், அது உங்கள் ஊழியத்தைப் பற்றிய அறிக்கையாக இருக்கும்.
- தொடர்ந்து ஆவிக்குரிய வளர்ச்சி அடைவதற்கான திட்டத்தைப் பற்றிப் பேசவும். சபையிலும், வாலிபர் குழுக்களிலும் இணையும்படி அவர்களை உற்சாகப்படுத்தவும். மேலும் வேதபாடம், ஜெபம் மற்றும் தனிப்பட்ட காரியங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக சிறுகுழு ஒன்றைத் தொடங்கப் பாருங்கள்.
- ஒருவர் இயேசு கிறிஸ்துவின் சீஷராக வளர உதவும்படிக் கிடைத்த வாய்ப்புக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

பெயர் ______________________________ நாள் ______________

# பாடம் 1

## எனக்கு என்ன நேர்ந்தது?

### மெய்யான வாழ்க்கை

ஜேசனுக்கு டேமனைத் தெரிந்த வரை டேமன் வாழ்ந்த விதத்தை மிகவும் ரசித்தான். அவன் சந்தித்தவர்களிலேயே டேமன் வித்தியாசமானவனாக இருந்தான். ஜேசனின் பெற்றோர் விவாகரத்து செய்து கொண்டபோது, வேறெந்த நண்பனையும் விட டேமன்தான் அதிகமாக அவனோடு இருந்து அவனுடைய உணர்வுகளை சரிசெய்ய உதவினான். அப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருமுறை, இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட விதத்தில் கொண்டிருக்கும் உறவு எப்படித் தன் வாழ்வில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியது என்று சொன்னான். அதே வாழ்க்கை-மாற்றும் உறவு ஜேசனுக்கும் வேண்டுமா என்றும் கேட்டான். ஜேசன் ஆம் என்று சொல்லி, டேமனுடன் சேர்ந்து ஒரு எளிய ஜெபத்தை ஏறெடுத்தான். இப்போது ஜேசனுக்கு ஒரு கேள்வி எழுந்தது: "நான் ஜெபம் செய்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். ஏதோ வித்தியாசமான ஒன்று நடந்திருக்கிறது. ஆனால், எனக்குள் அந்த மாற்றத்தைக் கொண்டு வர எனக்கு நேர்ந்தது என்ன?"

### வேதத் தேடல்

வேதாகமத்தில் பின்வரும் கேள்விகளுக்கான பதில்களைத் தேடவும்.

உங்களிடம் வேதாகமம் இல்லை என்றால், ஒன்றை வாங்கிக் கொடுக்க கிறிஸ்தவ நண்பர்களும், சபைகளும் இருக்கிறார்கள்.

யோவான் 1:12 என்று ஒரு வசனத்தின் பின் குறிப்பிடப்பட்டிருந்தால், யோவான் எழுதிய சுவிசேஷத்திற்குத் திருப்பி, அதன் முதல் அதிகாரத்தில் 12-ம் வசனத்தைப் பார்க்க வேண்டும். வேதாகமத்தின் அட்டவணைப் பக்கத்தில் எந்தெந்த புத்தகங்கள் எந்தெந்த பக்கங்களில் தொடங்குகின்றன என்ற விவரம் இருக்கும். வேதாகமத்தில் பதிலைக் கண்டுபிடித்து, உங்கள் சொந்த வார்த்தைகளில் அதை எழுதவும்.

1. தனிப்பட்ட விதத்தில் வந்த அழைப்பின் மூலம் நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது, நான் தேவனுடைய ______________________________ஆக மாறினேன் (*யோவான் 1:12*).
2. ஒரு தனிநபரின் வாழ்க்கையில் கிறிஸ்து வருவது, வெளிப்படுத்தின விசேஷம் 3:20-ல் கிறிஸ்து விவரித்திருக்கும் தனிப்பட்ட உறவைக் குறிக்கிறது.
   அ. வாசற்படியில் நின்று கதவைத் தட்டுபவர் யார்? (*இதை அறிய வெளிப்படுத்தின விசேஷம் 1:1 ஐப் பார்க்கவும்.*) ______________________________
   ஆ. அவருடைய சத்தத்திற்கும், அவர் கதவைத் தட்டுவதற்கும் பதில் கொடுக்கக் கூடியவர்கள் யார்? __________
   இ. நான் செய்யும்படி அவர் சொல்வது என்ன? ______________________________
   ______________________________
   ஈ. நான் கதவைத் திறந்தால் அவர் என்ன செய்வார்? ______________________________
   ______________________________
   உ. எப்படிக் கதவைத் திறக்க வேண்டும்? (வெளிப்படுத்தின விசேஷம் 3:19 ஐப் பார்க்கவும்.) ______________
   ______________________________
   ஊ. நீங்கள் கதவைத் திறந்திருக்கிறீர்களா? ______________________________
   எ. இயேசு கிறிஸ்து இப்போது எங்கு இருக்கிறார்? ______________________________
   ______________________________
3. கிறிஸ்து ஏன் நம்மைத் தேடி இரட்சிக்க வந்தார்? (*லூக்கா 19:10*) ______________________________
4. ரோமர் 3:23-ன்படி, நாம் ஏன் காணாமற் போனோம்? ______________________________
   ______________________________
5. வேதத்தின்படி, பாவத்தின் அபராதம் அல்லது சம்பளம் என்ன? (*ரோமர் 6:23*) ______________________________
   ______________________________
6. ரோமர் 5:8-9-ன்படி, என்னுடைய பாவங்களுக்காக மரித்தவர் யார்? (*மேலும் விவரங்களுக்கு ஏசாயா 53:6 ஐப் பார்க்கவும்.*)______________________________
7. என் பாவங்களை நான் அறிக்கையிட்டபோது, தேவன் என்ன செய்தார்? (*1 யோவான் 1:9*) (*குறிப்பு: 1 யோவான் என்னும் நிருபம் புதிய ஏற்பாட்டின் இறுதிப் பகுதிக்கு அருகில் இருக்கிறது. அது யோவான் எழுதிய நிருபங்களில் ஒன்று. அது புதிய ஏற்பாட்டின் துவக்கப் பகுதிகளில் காணப்படும் யோவான் எழுதிய சுவிசேஷமல்ல.*)__________
8. ஏசாயா 55:7-ல் உண்மையாக அறிக்கை செய்த பாவங்களைக் குறித்து என்ன செய்ய வேண்டுமென்று கூறும் வார்த்தைகளை கோடிட்டுக் காட்டுக.

   *“துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்*

*விட்டு,"கர்த்தரிடத்தில்"திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்."*

9. எபேசியர் 2:8–9 ஆகிய வசனங்களின்படி, நாம் எப்படி இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறோம்? (சரியான விடைக்கு முன்பாக இருக்கும் கட்டத்தில் குறியீடுக):
   - ☐ *அ.* நிறைய நன்மை செய்வதன் மூலம்
   - ☐ *ஆ.* சரியானதைச் செய்ய என்னால் இயன்ற அளவு முயல்வதன் மூலம்
   - ☐ *இ.* விசுவாசத்தினால் தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம்
10. நாம் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மாறிய பின்னர், நமக்கான தேவனுடைய நோக்கம் என்னவாக இருக்கிறது? (*எபேசியர் 2:10*) ____________________
11. நாம் யார் மூலமாக தேவனை அறிந்துகொள்கிறோம்? (*யோவான் 14:6,9*) ____________________
12. 1 யோவான் 5:13 -ம் வசனத்தை வாசியுங்கள். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உண்மையில் விசுவாசிப்பவர்களுக்கு நடப்பது என்ன?
    - ☐ *அ.* நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம் என்று நம்புவார்கள்
    - ☐ *ஆ.* தங்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கலாம் என்று நினைத்துக்கொள்வார்கள்
    - ☐ *இ.* தங்களுக்கு நித்திய ஜீவன் கிடைத்திருப்பதை நிச்சயமாக அறிவார்கள்
13. இன்றிரவு நான் மரித்தால், எங்கு போவேன்? (*யோவான் 6:45–47*) ____________________

**இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி**

____________________

____________________

____________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. நீங்கள் தேவனுடைய பிள்ளை என்று எப்படி அறிவீர்கள் என்பதைச் சிறு வாக்கியமாக எழுதவும். ____________________

   ____________________
2. நான் இப்போது ஆவியில் மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளையாக இருப்பதால் (*யோவான் 3;3–7*), நான் வளர ஆவிக்குரிய உணவு அவசியம். என்னுடைய உணவில் இருக்க வேண்டிய முதல் பொருள் என்ன? (*மத்தேயு 4:4*). ____________________

***கீழேயுள்ள சில நல்ல அறிவுரைகளின்படி நீங்கள் செய்யும்போது, அவற்றைக் குறியிடவும்:***

- ☐ தினமும் வேதம் வாசியுங்கள். அதுதான் உங்கள் உணவில் இருக்க வேண்டிய முதல் பொருள். தினமும் ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். யோவான் சுவிசேஷத்தில் தொடங்கி – தினமும் ஒரு அதிகாரம் அல்லது சில பத்திகளை வாசியுங்கள். "வேதத் தேடல்" பகுதியில் உள்ள பல கேள்விகள் யோவான் சுவிசேஷத்திலிருந்துதான் வருகின்றன.
- ☐ தினமும் ஜெபியுங்கள். இருதயத்திலிருந்து தேவனோடு பேசுங்கள்.
- ☐ கூடுமானபோதெல்லாம் சபைக்குச் செல்லுங்கள். அது வேதாகமத்தைப் பிரசங்கித்து, கிறிஸ்துவை உயர்த்தும் சபையாக இருக்க வேண்டும்.
- ☐ வேதவசனங்களை மனனம் செய்யுங்கள். "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" என்று சங்கீதம் 119:11 கூறுகிறது. வேதவசனங்களை மனனம் செய்வது தேவனுக்குக் கீழ்ப்படிய உதவும். ஒவ்வொரு பாடத்திலும் உள்ள மனப்பாட வசனங்களை மனனம் செய்ய மறவாதிருங்கள்.
- ☐ தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். ஒன்றைக் குறித்து அது சரியா, தவறா என்று நிச்சயமாகத் தெரியாதபோது, "இயேசு இதைக் குறித்து என்ன செய்வார்?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.
- ☐ சாட்சி. கர்த்தர் உங்களுக்குச் செய்ததை இன்னொருவருக்குச் சொல்லுங்கள்.

**மனப்பாட வசனம்**

*"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்."*
*(வெளிப்படுத்தின விசேஷம் 3:20)*

**என் ஆவிக்குரிய குறிப்பேடு**

____________________

____________________

"எனக்கு என்ன நடந்தது" என்பதை நன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இருப்பினும், இது உங்களுடைய மிகப்பெரிய சாகசத்தின் ஆரம்பம் மட்டுமே – கற்றுக்கொள்ள இன்னும் ஏராளம் உண்டு!

பெயர் ______________________ நாள் ______________

# பாடம் 2

## தேவனோடு நடத்தல்

### நிஜ வாழ்க்கை

ஜேசன் சோர்வாக உணருகிறான். சமீபத்தில் கிறிஸ்தவனாக மாறிய அவன் தன் வாழ்க்கையில் பல பெரிய மாற்றங்களைப் பார்த்திருக்கிறான். இருப்பினும், தன்னுடைய சில மனப்பான்மைகள் மற்றும் செய்கைகளில் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறான். அவன் தனது வேலைகளைச் செய்யும்படி மூன்றாவது முறையாக அவனுடைய தாயார் சொன்னபோது, அவர்களிடம் கோபத்தோடு மாறிப் பேசியதைக் குறித்து வருந்தினான். "கிறிஸ்தவனாக மாறிய பின்னர் தொடர்ந்து எப்படிக் கிறிஸ்தவனைப் போல வாழ்வது" என்பது ஜேசனுடைய கேள்வி. நீங்களும் இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்டிருக்கலாம்.

ஒரு குழந்தை பிறந்தவுடன், அது வளரத் தொடங்கி, பின்னர் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இது பொருந்தும். தேவனுடைய பிள்ளை ஒவ்வொரு அடியாக தேவனோடு நடக்கக் கற்றுக்கொள்கிறான்.

### வேதத் தேடல்

1. நீங்கள் யோவான் சுவிசேஷத்தை வாசிக்கும்போது தேவனோடு நடப்பதைக் குறிக்கின்ற பல காரியங்களை கவனிக்கலாம் அவை யாவை?

   அ. யோவான் 8:12 ______________________

   ஆ. யோவான் 1:37 ______________________

   இ. யோவான் 2:5 ______________________

   ஈ. யோவான் 5:14 ______________________

2. நாம் தேவனோடு நடப்பதைத் தடுப்பவன் யார்? (*1 பேதுரு 5:8*) ______________________

3. மத்தேயு 4:1-ல் பிசாசு என்ன செய்தான்? ______________________

4. இயேசு சோதனையில் விழுந்தாரா? (*எபிரெயர் 4:15*) ______________________
   சோதனையும், பாவமும் ஒன்றா? ______________________
   (சோதனை, "செய்வாயா?" என்கிறது, பாவம் "செய்வேன்" என்று சொல்லி – அதைச் செய்கிறது.)

5. பிசாசு நம்மைத் தாக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? (*யாக்கோபு 4:7*) ______________________

6. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்று ஏசாயா 59:2 கூறுகிறது. என்னை தேவனிடமிருந்து பிரிக்கும் ஒரே காரியம் எது? ______________________

7. ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் வல்லமையினால் அறிந்தே பாவம் செய்வதைத் தவிர்க்க முடியுமா? (*1 யோவான் 3:9*) ______________________

8. கிறிஸ்தவன் பாவம் செய்தால் 1 யோவான் 1:9 மற்றும் 2:1-ன்படி என்ன செய்ய வேண்டும்? (சரியான விடையைக் குறிக்கவும்)
   - ☐ *அ.* பாவம் செய்யாமல் இருக்க முடியவில்லை என்று சொல்ல வேண்டும்.
   - ☐ *ஆ.* பாவத்தை மறைத்து, பாவமே செய்யாதது போல நடிக்க வேண்டும்.
   - ☐ *இ.* உடனே இயேசு கிறிஸ்துவிடம் சென்று, பாவத்தை அறிக்கையிட்டு, தொடர்ந்து தேவனுக்காக வாழ வேண்டும்.

9. பாவம் செய்த கிறிஸ்தவன் அதை அறிக்கையிட்டால், தேவன் என்ன செய்வார்? (*1 யோவான் 1:9*) ______________________

10. யோவான் 14:21-ன்படி, கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்வது எதை உறுதி செய்கிறது? ______________________

11. யோவான் 10:27–29 ஆகிய வசனங்களை வாசித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்:

    அ. யாருக்கு நித்திய ஜீவனும், தேவனுடைய பாதுகாப்பும் உண்டு? ______________________

ஆ. நான் கிறிஸ்துவின் மந்தையில் இருக்க (வ.27), அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவரால் அறியப்பட்டு, பின்னர் வேறு என்ன காரியங்களைச் செய்ய வேண்டும்?______________________________

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

______________________________
______________________________
______________________________
______________________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. தேவனோடு நடக்க வேண்டும்! இதற்கு, சோதனையை எதிர்த்தல், தேவனுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் இயேசுவைப் பின்பற்றுதல் என்று அர்த்தம். நாம் சோதிக்கப்படும்போது அதிலிருந்து தப்பிக்க அல்லது அதைச் சகிக்க வழி உண்டாக்குவதாக தேவன் வாக்குப்பண்ணுகிறார். (*1 கொரிந்தியர் 10:13*)
2. பாவம் என்றால் என்ன என்று உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும். (*1 யோவான் 3:4 மற்றும் யாக்கோபு 4:17 ஆகிய வசனங்களை பார்க்கவும்*). ______________________________
______________________________
______________________________
______________________________
3. உங்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதி அல்லது பகுதிகளில் அதிகம் சோதிக்கப்படுவதாக நினைக்கிறீர்கள்? ________
______________________________
______________________________
______________________________
4. சோதனையை எதிர்த்து, தேவனுக்குக் கீழ்ப்படிய நீங்கள் கைக்கொள்ளும் யுக்தி எது? ______________________________
______________________________
______________________________
______________________________

### மனப்பாட வசனம்

*"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."*
*(1 கொரிந்தியர் 10:13)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டும் பல காரியங்களை அடுத்தப் பாடத்தில் காணலாம். மறுவடிவமைக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட பாடம் 3-ன் பதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

பெயர் ______________________________ நாள் ______________

# பாடம் 3

## தேவனிடமிருந்து கற்றுக்கொள்ளுதல்

### நிஜ வாழ்க்கை

கிறிஸ்தவனாக வாழ்வது மற்றும் நடந்துகொள்வது எப்படி என்று ஜேசன் மட்டும் கற்றுக்கொள்ளவில்லை. சபைக்கு அவ்வப்போது மட்டும் வந்து கொண்டிருந்த ஜானிஸ் - ம் ஜேசனுக்கு நடந்ததைப் பார்த்துத் தொடப்பட்டாள். அவளும் தேவனிடம் மன்னிப்புக் கேட்டு, அவருக்காக வாழத் தன்னை அர்ப்பணித்தாள். ஆனால், "சரி எது, தவறு எது என்பதைப் பற்றி இத்தனைக் கருத்துகள் இருக்க, தேவன் என்னிடம் விரும்புவது மற்றும் எதிர்பார்ப்பது என்ன என்று எப்படி அறிந்துகொள்வது? எது உண்மை என்று எப்படித் தெரிந்துகொள்வது?" என்பதுதான் அவளுக்கு எழுந்த கேள்விகளிலேயே மிகப் பெரியதாக இருந்தது.

எது உண்மை என்று எப்படி அறிந்துகொள்வது? இந்த “வேதத் தேடல்” தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய உதவும் இடத்திற்கு உங்களை வழிநடத்தும்.

### வேதத் தேடல்

1. யோவான் 17:17-ம் வசனத்தை வாசியுங்கள். இவ்வசனம் தேவனுடைய வார்த்தையை (வேதாகமத்தை) எப்படி விவரிக்கிறது? ______________________________

   ______________________________

2. வேதமே சத்தியம் என்பதை உறுதி செய்யும் விதத்தில் வேதம் நம்மிடம் எப்படிக் கொடுக்கப்பட்டது? (*2 தீமோத்தேயு 3:16*) ______________________________

   ______________________________

3. பின்வரும் வசனங்களின்படி, தேவனுடைய வார்த்தை நமக்குச் செய்வது என்ன:

   அ. 2 தீமோத்தேயு 3:14–15 ______________________________

   ஆ. யோவான் 15:3 ______________________________

   இ. அப்போஸ்தலர் 20:32 ______________________________

4. நீங்கள் யோவான் சுவிசேஷத்தை வாசிக்கும்போது, தேவனுடைய வார்த்தையின் முக்கியத்துவத்தைப் பற்றிய போதனைகளைக் கவனிக்கலாம்:

   அ. கிறிஸ்து தம் பிதாவின் வார்த்தையைக் (கட்டளைகளைக்) கொண்டு என்ன செய்தார்? (*யோவான் 8:55*) ____

   ______________________________

   ஆ. சிலரின் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்குக் (செய்திக்கு அல்லது உண்மைக்கு) கொடுக்கப்படும் இடம் எது? (*யோவான் 8:37*) ______________________________

   ______________________________

   இ. நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்றால், அவருடைய வார்த்தையை என்ன செய்வோம்? (*யோவான் 8:47*) ______________________________

   ______________________________

   ஈ. கிறிஸ்துவின் உண்மையான *சீஷர்* வார்த்தையைக் (வெளிப்பாட்டை அல்லது போதனையைக்) கொண்டு என்ன செய்வார்? (*யோவான் 8:31*) ______________________________

   ______________________________

   உ. ஆவிக்குரிய மற்றும் நித்திய வாழ்வைக் காத்துக்கொள்ள நாம் வார்த்தையை (கட்டளையை, போதனையை அல்லது வாக்கை) என்ன செய்ய வேண்டும்? (*யோவான் 8:51*)______________________________

   ______________________________

5. நான் கிறிஸ்துவை நேசித்தால், என்ன செய்வேன்? (*யோவான் 14:23*) ______________________________

   ______________________________

6. யோவான் 20:31-ம் வசனத்தை வாசியுங்கள். தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டது ஏன்? ______________ இதை விசுவாசிக்கும் எனக்குக் கிடைக்கும் பரிசு என்ன? ______________________________

7. பிசாசு நம்மைத் தோற்கடிக்க முயற்சி செய்யலாம், ஆனால் அவனைத் தோற்கடிக்க தேவன் நமக்கு ஒரு ஆயுதத்தைக் கொடுத்திருக்கிறார். "ஆவியின் பட்டயம்" எனப்படும் அது என்ன? (*எபேசியர் 6:17*) ______________

   ______________________________

8. மத்தேயு 4:4, 7, 10 ஆகிய வசனங்களில், இயேசு எப்படி பிசாசை எதிர்த்தார்? ______________________________

   ______________________________

9. சங்கீதம் 119:11-ன்படி, நான் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதிருக்க தேவனுடைய வார்த்தையை என்ன செய்ய வேண்டும்? ______________________________

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

______________________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. தேவனுடைய வார்த்தையின் எந்த உண்மை சமீபத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் உங்களுக்கு உதவியாக இருந்தது? ______________________________
2. கிறிஸ்தவர்கள் ஏன் தினமும் வேதம் வாசிக்க வேண்டும்? ______________________________

### மனப்பாட வசனம்

*“நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." (சங்கீதம் 119:11)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

______________________________

கிறிஸ்தவராகிய உங்களுக்கு "தேவனிடமிருந்து கற்றுக்கொள்வதைத்" தவிர இன்னுமொரு வியத்தகு சிலாக்கியம் உண்டு. அது அடுத்தப் பாடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெயர் ______________________________ நாள் ______________

# பாடம் 4

## தேவனோடு பேசுதல்

### நிஜ வாழ்க்கை

“உன்னால் பார்க்கக் கூட முடியாத ஒரு தேவனோடு எப்படிப் பேசுவாய்?" என்று தன் பக்கத்து வீட்டு நண்பனாகிய மாற்க் கேட்டது ஜேஸனுக்கு நல்ல கேள்வியாகத்தான் இருந்தது. ஏனென்றால் ஒரு மாதத்திற்கு முன்பு ஜேஸனும் அப்படித்தான் கேட்டான். இப்போது புதிதாகக் கிறிஸ்தவனாக மாறியிருக்கும் அவன் அதற்கு பதிலளிக்க முயற்சி செய்தான். ஆனால், சில சமயங்களில் தன் ஜெபங்கள் வெறும் வார்த்தையாக இருப்பது போல உணருகிறான். “உன்னால் பார்க்கக் கூட முடியாத ஒரு தேவனோடு எப்படிப் பேசுவாய்? இதை எப்படி ஒரு நண்பனுக்கு விளக்கிச் சொல்வாய்?" இதுதான் ஜேஸனின் இப்போதைய கேள்வி.

“கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; "காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்" (சங்கீதம் 5:3) என்று சங்கீதக்காரன் கூறுகிறார். "ஜெபம்" என்னும் சாகசத்தைப் பற்றி வேதாகமம் கூறும் மற்றும் சில அறிவுறுத்தல்களைத் தேடிக் காண்போம்.

### வேதத் தேடல்

1. தம் பிதாவுடன் தனித்து ஜெபிக்கும் நேரத்தைக் கொண்டிருப்பதை இயேசு நம்பினாரா? (*மாற்கு 1:35*) ______________________________

2. நான் எப்போது ஜெபிக்க வேண்டும்? (*லூக்கா 18:1*) ______________________________

3. ஒவ்வொரு ஜெபத்தின்போதும் இருக்க வேண்டிய மனப்பான்மை அல்லது உணர்வு வெளிப்பாடு என்ன? (*1 தெசலோனிக்கேயர் 5:17–18*) ______________________________

4. சங்கீதம் 66:18-ன்படி, பதில் கிடைக்காத ஜெபத்திற்கான முக்கிய காரணம் என்ன? ______________________________

5. நாம் எதைக் குறித்து ஜெபிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது எது? (*1 யோவான் 5:14*) ______________________________

6. யோவான் சுவிசேஷத்தில் ஜெபத்தைப் பற்றிய சில காரியங்களைக் கற்றுக்கொண்டீர்களா?

   அ. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள சிலாக்கியம் என்ன? (*யோவான் 16:24*) ______________________________

   ஆ. ஜெபத்திற்கு பதில் கொடுப்பதில் இருக்கும் தேவனுடைய நோக்கம் என்ன? (*யோவான் 14:13*) ______________________________

   இ. நம்முடைய வேண்டுதல்களுக்கு பதில் கொடுக்க கிறிஸ்து நம்மிடம் கேட்பது என்ன? (*யோவான் 15:7*) ______________________________

7. பதிலைப் பெற்றுக்கொள்ள, ஜெபிக்கும்போது என்ன செய்ய வேண்டும்? (*மத்தேயு 21:22*) ______________________________

8. நான் ஜெபிக்கக் கூடிய குறிப்பிட்ட சில காரியங்கள் யாவை?

   அ. மத்தேயு 6:11 ______________________________

   ஆ. மத்தேயு 9:38 ______________________________

   இ. பிலிப்பியர் 1:9 ______________________________

   ஈ. 1 தீமோத்தேயு 2:1–2 ______________________________

   உ. யாக்கோபு 1:5 ______________________________

9. கிறிஸ்தவர்கள் "சோதிக்கப்படும்போது பாவத்தில் விழாமல்" காப்பது எது? (*மத்தேயு 26:41*) ______________________________

10. மிகச் சிறந்த ஜெபங்கள் என்பவை யாவை? (மிகச் சரியான ஒரு விடையைக் குறிக்கவும்)
- ☐ *அ.* சரியான, மதரீதியான வார்த்தைகளைப் பயன்படுத்துதல்
- ☐ *ஆ.* முறைசார்ந்த மற்றும் கனத்துக்குரிய விதத்தில் ஜெபிப்பதாகக் காண்பித்தல்
- ☐ *இ.* என் இருதயத்திலிருந்து வரும் ஜெபம்

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. (குடும்பச் சூழ்நிலைகள், நண்பர்கள், பள்ளிக்கூடம், வீட்டுப்பாடம் போன்றவற்றை) பற்றி தேவனிடம் பேச விரும்பும் சில குறிப்பிட்ட காரியங்களைக் குறிப்பிடுக.

______________________________________________

______________________________________________

______________________________________________

2. தினமும் ஜெபிக்க ஒரு நேரத்தைக் குறித்திருக்கிறீர்களா? நாள் முழுவதும் ஜெபிக்க விரும்பினாலும், தினமும் விசேஷித்த விதத்தில் ஜெபிக்க எந்த நேரத்தையும், இடத்தையும் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்? ______________

______________________________________________

______________________________________________

______________________________________________

### மனப்பாட வசனம்

*"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்." (யோவான் 16:24)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

சர்வ வல்லமையுடைய தேவனிடம் பேசுவது எத்தனை பெரிய சிலாக்கியம் என்பதை இதுவரை நீங்கள் உணராமல் இருக்கலாம். அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் அன்பும், ஆசீர்வாதமும் அவருக்காக ஏதேனும் ஒன்றைச் செய்யும்படி உங்களைத் தூண்டுகிறது அல்லவா?

பெயர் ____________________ நாள் __________

# பாடம் 5

## தேவனோடு பகிர்ந்துகொள்ளுதல்

### நிஜ வாழ்க்கை

ஒரு மாதமாக, செவ்வாய்க்கிழமை தோறும் எட்டு நண்பர்கள் கூடி வந்தார்கள். டேமன், ஜேஸன், ஜானிஸ் மற்றும் ஐந்து நண்பர்கள் ஜெபிக்கவும், வேதபாடம் படிக்கவும், ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவும் அவர்கள் சேர்ந்து ஒரு குழுவை அமைத்திருந்தார்கள். சென்ற முறை அக்குழு கூடியபோது, ஏஞ்சலாவின் ஜெபம் அருமையாக இருந்தது. முன்பு தேவனுடைய பிரசன்னத்தை உணரப் போராடிய அவள் சமீபத்தில் ஒரு விடுதலையை அனுபவித்திருந்தாள். "தேவனே, முன் எப்போதையும் விட இப்போது நான் உம்மை உண்மையாக விசுவாசிக்கிறேன்! உமக்குப் பிரியமாக இருந்து, உமக்கு ஊழியம் செய்து, என்னை முழுவதும், உம்மோடு எனக்கிருக்கும் அனைத்தையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்" என்பதுதான் அவளுடைய ஜெபம்.

இதே போன்றதொரு எண்ணத்தை அப்போஸ்தலனாகிய பவுல் வெளிப்படுத்தினார்: "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரிந்தியர் 10:31). இந்த சத்தியம் எப்படி நம் எல்லோருக்கும் பொருந்துகிறது என்பதை இப்பாடம் ஆய்வு செய்கிறது.

### வேதத் தேடல்

1. மத்தேயு 22:36–40-ன்படி:

   அ. நான் தேவன் மீது எந்த அளவுக்கு அன்புகூர வேண்டும்? ____________________

   ஆ. பிறனிடத்தில் நான் எந்த அளவுக்கு அன்புகூர வேண்டும்? ____________________

2. தேவனையும், பிறரையும் நேசிப்பதை எப்படி வெளிப்படுத்துவது? (*1 யோவான் 5:2–3*) ____________________

   ____________________

3. தேவன் மற்றும் அவருடைய நோக்கத்திற்காக முற்றிலும் அர்ப்பணிப்பதைப் பற்றி இயேசு கூறியது என்ன?

   அ. கோதுமை மணி ஒன்று மிகுந்த பலனைக் கொடுக்க வேண்டுமானால் அது என்ன செய்ய வேண்டும்? (*யோவான் 12:24–25*) ____________________

   ஆ. சுயநலமான விருப்பங்களை நாடுவதற்கு பதிலாக இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தால், பிதாவானவர் என்ன செய்வார்? (*யோவான் 12:26*) ____________________

4. கிறிஸ்தவனாகிய எனக்குப் பிதாவுடன் ஏற்பட்டிருக்கும் புதிய உறவினால் வாழ்க்கையின் மற்ற உறவுகளைப் பற்றி புதிய மனப்பான்மை உண்டாயிருக்கிறது. நான் "கிறிஸ்துவுக்குள்" (அவருடன் ஒன்றான கிறிஸ்தவனாக) இருந்தால், பழையவற்றிற்கு பதிலாக வந்திருப்பவை யாவை? (*2 கொரிந்தியர் 5:17*) ____________________

   ____________________

   அ. உலகப் பொருள்களுடன் என்னுடைய புதிய உறவு:

   1) இப்போது நான் பொருட்களை [கொடுக்க] [வைத்துக்கொள்ள] விரும்புகிறேன். (சரியான வார்த்தையை வட்டமிடுக) (லூக்கா 6:38).

   2) எபேசியர் 4:28-ன்படி, பொருட்களைக் குறித்த மூன்று சரியான மனப்பான்மைகளைக் குறிக்கவும்.

      - ☐ இனி திருடாதிருக்க வேண்டும்.
      - ☐ கடினமாக உழைப்பவராக இருக்க வேண்டும்.
      - ☐ என்னால் முடிந்த அனைத்தையும் அடைந்துவிட வேண்டும்.
      - ☐ தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
      - ☐ என் மனப்பான்மை முக்கியமல்ல.
      - ☐ சிறப்பானதைப் பெறும் வரை முயற்சி செய்ய வேண்டும்.

   ஆ. பிறருடனான என் புதிய உறவுமுறை:

   1) மற்றவர்களிடம் நான் எப்படி இருக்க வேண்டும்? (*எபேசியர் 4:32*) ____________________

      ____________________

   2) முழுமையாக நீதியுள்ள வாழ்க்கை வாழ உதவியாக கிறிஸ்தவர் அல்லாதவருடன் மிக நெருங்கிய தொடர்பு கொள்வதை [தவிர்க்க] [நாட] (சரியான வார்த்தையை வட்டமிடுக) வேண்டும் (*2 கொரிந்தியர் 6:14*).

   இ. என்னுடனான என் புதிய உறவு எப்படி இருக்கும்:

   1) என் சரீரத்தைப் பராமரிக்கும்போதும், பயன்படுத்தும்போதும், அது என்னவென்று நினைவுகூர வேண்டும்? (*1 கொரிந்தியர் 6:19*). ____________________

      ____________________

   2) என் நேரம் மற்றும் வாய்ப்புகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? (*எபேசியர் 5:15–16*) ____________________

5. நான் ______________________________ அன்புகூர வேண்டும் (*1 யோவான் 2:10*), என்றாலும், ______________________________ அன்புகூரக் கூடாது (*1 யோவான் 2:15–16*).
6. நாம் ஏன் தம்மை மகிமைப்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்? (*1 கொரிந்தியர் 6:20*) ______________________________
7. (தேவனுடைய முழு ஆளுகையின் கீழிருக்கும்) தேவனுடைய ராஜ்யத்தை என் வாழ்க்கையின் முக்கியப் பகுதியாகக் கொள்வதன் விளைவு என்ன? (*மத்தேயு 6:31–33*) ______________________________
8. தேவனுடைய அன்புக்கு பதில் செலுத்தும் விதத்தில் நம் வாழ்க்கையை தேவனுடன் பகிர்ந்துகொண்டால், யார் அதிகப் பலனடைவார்கள்? (*மாற்கு 10:28–30*) ______________________________

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

______________________________

## வாழ்க்கைப் பயன்பாடு

ஒருவர் தன்னை தேவனுடன் பகிர்ந்துகொள்ள பல வழிகள் உண்டு. உங்களை தேவனோடு பகிர்ந்து கொள்வதற்கான ஐந்து குறிப்பிட்ட வழிகளைக் குறிப்பிடுக:

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

### மனப்பாட வசனம்

*"ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1 கொரிந்தியர் 10:31)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

______________________________

தேவனோடு நம்மைப் பகிர்ந்துகொள்வதில் சந்தோஷம் உண்டு என்பதைக் கற்றுக்கொண்டோம். கிறிஸ்துவைப் பற்றிப் பிறருடன் பேசுவதிலும் ஒரு விசேஷித்த விதமான பகிர்ந்துகொள்ளல் நடக்கிறது. அதற்கு சாட்சி சொல்லுதல் என்று பெயர். அடுத்தப் பாடத்தில் அதைப் பற்றிப் பார்ப்போம்.

பெயர் ____________________ நாள் ____________

# பாடம் 6

## என் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்

### நிஜ வாழ்க்கை

ஏஞ்சலா தன்னை முற்றிலுமாக தேவனிடம் கொடுக்கும் வரை சாத்தியமே இல்லை என்று நினைத்திருந்த ஒரு சந்தோஷத்தை இப்போது தன் வாழ்வில் கண்டுகொண்டாள். மற்றவர்களும், குறிப்பாகத் தன் அண்ணன் கார்ல், தன்னைப் போலவே இருதயத்தில் மாற்றம் பெற வேண்டுமென்று நினைக்கிறாள். கார்ல்-ன் புதிய நண்பர்கள் மற்றும் நடத்தையைக் குறித்து கவலைப்படும் ஏஞ்சலா, "அவனிடம் என்ன சொல்லவதென்றோ, இயேசு என் வாழ்க்கையை எப்படி மாற்றினார் என்று சொல்லவோ தெரியவில்லை. ஆனால் நீங்கள் எனக்காக ஜெபித்தால், அவனிடம் பேசுவதற்கான வழியை நிச்சயமாகக் கர்த்தர் எனக்குக் காண்பிப்பார்" என்று தன் தோழிகளிடமும், ஜெபப் பங்காளர்களிடமும் சொல்கிறாள்.

ஏஞ்சலா ஏற்கனவே முக்கியமான ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டுவிட்டாள்: கிறிஸ்துவின் மூலம் பெரிய மாற்றத்தை அனுபவிக்கும் அநேகர் மற்றவர்களிடம் அதைச் சொல்லாமல் விட்டுவிடுகிறார்கள். சாட்சி சொல்வது என்பது கிறிஸ்து உங்களுக்காகச் செய்ததைப் பகிர்ந்து கொள்வதாகும்.

### வேதத் தேடல்

1. கிறிஸ்து பிசாசு பிடித்த ஒருவனை சுகமாக்கிய பின்னர், அவனுக்குக் குறிப்பாக ஒரு கட்டளை கொடுத்தார். இங்கு, "சாட்சி சொல்வது" எப்படி வரையறுக்கப்பட்டுள்ளது? (*லூக்கா 8:39*) ____________________

2. சாட்சி பகருவதைக் குறித்து யோவான் சுவிசேஷம் அதிகமாகப் போதிக்கிறது:

   அ. சாட்சி சொல்வது (சாட்சியளிப்பது) என்பது பின்வருவதைப் பகிர்ந்து கொள்வதாகும் (சரியான ஒன்றைத் தெரிவு செய்க):
   - ☐ *அ.* உங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட சத்தியம்.
   - ☐ *ஆ.* யாரோ ஒருவர் சொல்லக் கேட்ட ஒன்று.
   - ☐ *இ.* நீங்கள் கண்ட, கேட்ட ஒன்று – உங்கள் சொந்த அனுபவம் (*யோவான் 3:32*).

   ஆ. யோவான் 1:40–41-ல் அந்திரேயா என்ன செய்தார்? ____________________

   இ. நாம் செய்ய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கும் "கிரியை" என்ன என்று இயேசு கூறுகிறார்? (*யோவான் 6:28–29*) ____________________

   ஈ. யோவான் 15:16-ல், நாம் செய்யும்படி இயேசு சொல்வதென்ன? ____________________

3. கிறிஸ்தவனாக மாறியதுதான் உங்களுக்கு நடந்த மிகப்பெரிய விஷயம் என்றால், இன்னொருவருக்கு நீங்கள் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய பரிசு எது? ____________________

4. மத்தேயு 28:18–20-ல் நாம் செய்யும்படி இயேசு கட்டளையிடுவது என்ன? ____________________

5. ஆதிக் கிறிஸ்தவர்கள்எப்படித் தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதைக் காண்பித்தார்கள்? (*அப்போஸ்தலர் 8:12,35–38*) ____________________

   விசுவாசத்தின் இந்த வெளிப்பாட்டைக் காண்பித்திருக்கிறீர்களா? (*பொருத்தமானதைக் குறியிடுக*)
   - ☐ ஆம் ☐ அதைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்
   - ☐ இல்லை ☐ இது அவ்வளவு முக்கியமானது என்று தெரியவில்லை

6. கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களின் நிலை என்ன? (*யோவான் 3:18*) ____________________

7. நான் கிறிஸ்துவைப் பின்பற்றினால், அவர் என்ன செய்வதாகச் சொன்னார்? (*மத்தேயு 4:19*) ____________________

8. 1 பேதுரு 3:15-ன்படி, கிறிஸ்துவுக்கு சாட்சி பகர என்னை ஆயத்தம் செய்வது எப்படி? ____________________

9. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள பவுல் எங்கு மக்களைச் சந்தித்தார்? (*அப்போஸ்தலர் 17:17; 20:20*) ______

10. நம்முடைய சாட்சி ஏன் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்? (*யோவான் 14:6*) ______

11. கிறிஸ்துவின் சாட்சிகளாக நாம் சொல்ல வேண்டிய செய்தி என்ன? ______
யோவான் 3:16 ______
ரோமர் 6:23 ______
ரோமர் 3:23 ______
ஏசாயா 53:6 ______
யோவான் 1:12 ______

12. ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின், அவரைக் குறித்து நமக்கு இருக்கும் பொறுப்பு என்ன? (*அப்போஸ்தலர் 14:21–22*) ______

## இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

______

## வாழ்க்கைப் பயன்பாடு

1. சாட்சி கொடுப்பதில் மூன்று பகுதிகள் உண்டு: (1) கிறிஸ்தவனாக மாறும் முன் என் வாழ்க்கை; (2) நான் எப்படிக் கிறிஸ்தவனாக மாறினேன்; (3) கிறிஸ்து என் வாழ்க்கையில் யாராக இருக்கிறார். உங்கள் நண்பருடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு சிறு சாட்சியை எழுதவும்.

______

2. கிறிஸ்து தேவைப்படுகிற மூவரின் பெயர்களை எழுதுங்கள். அவர்களுக்காக ஜெபித்து, அவர்களிடம் சாட்சி சொல்லும் வாய்ப்புகளை நாடுங்கள்.
   1. ______
   2. ______
   3. ______

## மனப்பாட வசனம்

*இயேசு "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்." (மத்தேயு 4:19)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

______

பிறரிடம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்பதை அறிந்துகொண்டீர்கள், ஆனால் அதைச் செய்ய பயப்படலாம். பயத்தின் மத்தியிலும் பேசுவதற்கான வல்லமையை எங்கு பெற்றுக்கொள்ள முடியும்? அடுத்தப் பாடத்தில் அதைப் பற்றிப் பார்ப்போம்.

பெயர் ______________________________ நாள் ______________

# பாடம் 7

## தேவனுடைய ஆவியினால் நிரப்பப்படுங்கள்

### நிஜ வாழ்க்கை

"ஆண்டவரே, நான் எந்த அளவுக்கு உமக்காக வாழ விரும்புகிறேன் என்று உமக்குத் தெரியும். ஆனால் என் வாழ்க்கை மிகவும் குறைவுள்ளதாக இருக்கிறது. உண்மையாக உமக்குப் பிரியமாக வாழ விரும்புகிறேன். உம்மை உண்மையாகப் பின்பற்றுவது என்றால் என்னவென்று பிறருக்குக் காண்பிக்க விரும்புகிறேன். உம்முடைய நாமத்தில் சாட்சி சொல்ல எனக்கு தைரியம் வேண்டும். ஆனால், எப்போதும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல் போய்விடுகிறது. என் வாழ்க்கையில் ஏதேனும் குறைவாக இருக்கிறதா, ஆண்டவரே?" இது ஜேஸன் செய்த உண்மையான ஜெபம்.

தேவனுக்காக நிறைய செய்ய விரும்பி அதைச் செய்ய பலம் இல்லாதது போல உணர்வது ஜேஸன் மட்டுமல்ல. இந்தக் குழப்பத்திற்கான பதில் மிகத் தெளிவானது: தேவனுடைய ஆவியின் மூலம் நாம் இன்னும் அதிகமான தேவ வல்லமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனால்தான், தன் காலத்து கிறிஸ்தவர்களை "ஆவியினால் நிறைந்திருக்கும்படி" பவுல் கூறினார் (எபேசியர் 5:18).

### வேதத் தேடல்

1. இயேசு தம் சீஷருக்கு பரிசுத்த ஆவியைப் பற்றி போதிக்க அதிக நேரம் செலவிட்டார். அவருடைய போதனைகளில் சிலவற்றை யோவான் பதிவு செய்திருக்கிறார்:

   அ. தேவனோடு நமக்கு (ஜீவத்தண்ணீருள்ள நதிகளைப் போல) நிரம்பி வழியும் ஒரு அனுபவத்தைக் கொடுப்பவர் யார் என்று இயேசு கூறினார்? (*யோவான் 7:38–39*) ______________________________

   ______________________________

   ஆ. நமக்குப் போதிப்பவர் யார்? (*யோவான் 14:26*) ______________________________

   இ. சத்திய ஆவியானவர் யாரைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்? (*யோவான் 15:26*) ______________

   ஈ. ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் முதல் முறையாக பரிசுத்த ஆவியானவர் எப்போது கிரியை செய்கிறார்? (*யோவான் 3:5*) ______________________________

   ______________________________

2. கிறிஸ்துவின் சீஷர்கள் சாட்சியாக இருப்பதற்கான வல்லமையை யாரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்? (*அப்போஸ்தலர் 1:8*) ______________________________

   ______________________________

3. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்னரும் சவுலுக்கு (பவுலுக்கு) தேவைப்பட்டது என்ன? (*அப்போஸ்தலர் 9:17*)

   ______________________________

   ______________________________

4. கொரிந்து சபையில் ஆவியின் நிறைவு குறைவாக இருந்தது, பொறாமை போன்ற தவறான மனப்பான்மைகள் மூலம் வெளிப்பட்டது. அது, அவர்கள் இன்னும் எப்படி இருந்தார்கள் என்பதைக் குறிக்கிறது? (*1கொரிந்தியர் 3:1,3*) ______

   ______________________________

5. நம்மைச் சுத்திகரித்து, முழுமையாக தேவனுக்கென்று பிரித்தெடுக்க பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியை என்ன? (*1 பேதுரு 1:2*) ______________________________

   ______________________________

6. இயேசு தம் சீஷருக்காக என்ன சொல்லி ஜெபித்தார்? (*யோவான் 17:17*) ______________________________

   ______________________________

7. தேவன் ஆதிக் கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுத்தபோது, அவர்களுடைய அசுத்தமான இருதயத்தைக் குறித்து என்ன செய்தார்? (அப்போஸ்தலர் 15:8–9)______________________________

8. நம்முடைய வாழ்க்கையில் அசுத்தமாக இருக்கும் எந்தவொரு பகுதியையும் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும்? (*2 கொரிந்தியர் 7:1*) ______________________________

   ______________________________

9. நம்முடைய பரிசுத்தம் எவ்வளவு முழுமையாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? ("பரிசுத்தம்", "சுத்திகரித்தல்" அல்லது "பரிசுத்தமாகுதல்" என்று ஒரே கருத்தைக் குறிக்க வெவ்வேறு வேத மொழிபெயர்ப்புகள் வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தலாம்) (*1 தெசலோனிக்கேயர் 5:23*) ______________________________

   ______________________________

10. என்னை "முற்றிலும் பரிசுத்தமாக்குபவர்" யார்? (*1 தெசலோனிக்கேயர் 5:23*) ______________________________

   ______________________________

11. பிரமாணம் என்னைப் "பாவம், மரணம் என்னும் பிரமாணங்களிலிருந்து" விடுவிக்கிறது. (*ரோமர் 8:2*) ___________
_____________________________________________

12. கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் அவசியமான எந்தக் குணத்தில் குறைவுபட்டதை கொரிந்தியரின் தவறான மனப்பான்மைகள் காண்பித்தன? (*1 கொரிந்தியர் 13:13*) ___________
_____________________________________________

13. தேவ அன்பை நான் ___________ இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (*ரோமர் 5:5*).

14. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பின்னர், நான் ___________ -ன்படி வாழாமல் ___________ -ன்படி வாழ வேண்டும் (*ரோமர் 8:4–5*).

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. பரிசுத்த ஆவியானவரோடு இப்போது எனக்கிருக்கும் தொடர்பு என்ன?

_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________

2. சுத்திகரிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஆவியினால் நிறைந்து, மற்றவர்களிடமும் வழிந்தோடும் ஒன்றாகும். நீங்கள் தேவ ஆவியினால் நிரப்பப்பட விரும்புகிறீர்களா? அதற்கான நான்கு வழிகள் பின்வருமாறு:

- ☐ தேவன் தம்முடைய ஆவியை நிறைவாகக் கொடுக்குமாறு கேளுங்கள் (*லூக்கா 11:13*).
- ☐ உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக தேவனிடம் ஒப்புக்கொடுங்கள் (*ரோமர் 12:1–2*).
- ☐ உள்ளான சுத்திகரிப்பு உங்களுக்குத் தேவை என்பதை ஒப்புக்கொள்ளுங்கள் (*அப்போஸ்தலர் 15:8–9*).
- ☐ விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கும் தேவ ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுங்கள் (*அப்போஸ்தலர் 15:8–9; 1 தெசலோனிக்கேயர் 5:23–24*).

### மனப்பாட வசனம்

*"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." (1 தெசலோனிக்கேயர் 5:23)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________
_____________________________________________

இந்தப் பாடங்களைப் படிப்பதிலும், கிறிஸ்தவ வாழ்க்கையிலும் முன்னேறி இருப்பதற்காக உங்களைப் பாராட்டுகிறோம். இதோடு நிறுத்திவிடாதீர்கள்! இதில் நீங்கள் தனியாக இல்லை. அடுத்தப் பாடத்தில் அதைப் பற்றிப் பார்ப்போம்.

பெயர் ______________________________ நாள் ______________

# பாடம் 8

## குடும்ப அங்கத்தினர்

### நிஜ வாழ்க்கை

ஜேஸனுக்கு ஒரு குடும்பம் கிடைத்துவிட்டது. அந்தக் குடும்பத்தில் டேமன், ஜானிஸ், மற்றும் ஏஞ்சலா ஆகியோரும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவனுடைய வயதுதான், அவர்கள் எல்லோரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள், மற்றும் ஒரேவிதமான காரியங்களில் ஆர்வம் காண்பிக்கிறார்கள் என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. இருப்பினும், ஜேஸனுக்குக் கிடைத்த இந்தக் குடும்பம் சாதாரண ஒரு நட்புறவை விட மிகவும் பரந்து, விரிந்த ஒன்று. அவனுடைய புதிய சபையில் உள்ள 80 வயதான ரீட் பாட்டி மற்றும் 7 வயதான ஜிம்மி என்று யாராயிருந்தாலும் அவர்களுடனும் மிகவும் நெருக்கமாக இருப்பதாக உணர்கிறான். தான் ஒரு கிறிஸ்தவனாக மாறியபோது, மற்ற அனைத்து உண்மைக் கிறிஸ்தவர்களும் அவனுக்கு சகோதர, சகோதரிகளாக மாறினார்கள் என்பதை ஜேஸன் கண்டுகொண்டான். இது உங்களுக்கும் பொருந்தும்! நீங்கள் இணைந்திருக்கும் இந்தப் புதிய குடும்பம் "சபை" எனப்படுகிறது. உங்கள் ஆவிக்குரிய குடும்பத்தில் ஏராளமாக அன்பு செலுத்த மறவாதிருங்கள்.

### வேதத் தேடல்

1. கிறிஸ்துவின் *சீஷர்களை* வேதாகமம் பலவிதமான பெயர்களில் அழைக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 11:26-ல் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் மூன்று பதங்களைக் குறிப்பிடுக:

   அ. ______________________________

   ஆ. ______________________________

   இ. ______________________________

2. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்பதால், சிலசமயங்களில் சபை என்பது ______________________________ எனப்படுகிறது (*1 கொரிந்தியர் 12:27*).

3. சபைக்குத் தலையாயிருப்பவர் யார்? (*எபேசியர் 5:23*) ______________________________

4. சபை கிறிஸ்துவுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அவருடைய எந்தச் செய்கையால் அறிகிறோம்? (*எபேசியர் 5:25*) ______________________________

5. சபையில் அங்கம் வகிக்க கிறிஸ்துவுடன் என் உறவு எப்படி இருக்க வேண்டும்? (*எபேசியர் 5:24*) ______________________________

6. பவுல் கிறிஸ்துவுக்குள் தாம் வாழ்ந்த விதத்தைக் கற்றுக்கொடுத்த சூழ்நிலை என்ன? (*1கொரிந்தியர் 4:17*) ______________________________

7. சபையைக் குறித்து யோவான் எழுதிய சுவிசேஷம் உங்களுக்குக் கற்பிப்பது என்ன?

   அ. நான் உண்மையான சபையில் (கிறிஸ்துவின் *சீஷனாக*) அங்கம் வகிக்கிறேன் என்பதை உலகம் எப்படி அறியும்? (*யோவான் 13:35*) ______________________________

   ஆ. பேதுருவும் அவருக்குப் பின் வந்த போதகர்களும் சபையில் கொண்டிருந்த விசேஷித்த பொறுப்பு என்ன? (*யோவான் 21:16*) ______________________________

8. 1 கொரிந்தியர் 11:23–26 ஆகிய வசனங்களை வாசியுங்கள். "ஐக்கியம்" அல்லது "கர்த்தருடைய பந்தி" என்னும் நிகழ்வை சபை தொடர்ந்து கொண்டாடுகிறது. கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும்போது நாம் எதை நினைவுகூருகிறோம்? ______________________________

9. என் சபை குடும்பத்தில் உள்ள ஒரு சகோதரன் அல்லது சகோதரியை எப்படி நடத்த வேண்டும்? (கலாத்தியர் 6:2) ______________________________

10. பரிசுத்த ஆவியானவர் எந்த நோக்கத்தில் தனிப்பட்ட நபர்களுக்கு விசேஷித்த வரங்களைக் கொடுக்கிறார்? (*1 கொரிந்தியர் 12:4,7*) ______________________________

11. சில சபைகள் வல்லமையும், அன்பும் கொண்டதாக இருக்கின்றன, மற்றும் சில சபைகள் அப்படி இருப்பதில்லை. பின்வரும் இரண்டு சபைகளில் எந்தச் சபை நீங்கள் உருவாக்க அல்லது அங்கம் வகிக்க விரும்பும் சபையைப் போலிருக்கிறது? (ஒன்றைத் தெரிவு செய்க.)
    - ☐ *அ.* எருசலேம் சபை (*அப்போஸ்தலர் 4:32–33*)
    - ☐ *ஆ.* லவோதேக்கியா சபை (*வெளிப்படுத்தின விசேஷம் 3:14–17*)

12. அப்போஸ்தலரின் உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றைக் குறித்து ஆதிக் கிறிஸ்தவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? (*அப்போஸ்தலர் 2:42*) ____________________

13. நான் கர்த்தருக்குப் பிரியமாக வாழ வேண்டுமென்றால் எதில் கவனமாக இருக்க வேண்டும்? (*எபிரெயர் 10:25*) ____________________

### இந்தப் பாடத்தைப் பற்றிய என் கேள்வி

____________________

____________________

____________________

____________________

## வாழ்க்கைப் பயன்பாடு

1. சபையைக் கட்டி எழுப்பும்படி தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் சில வரங்கள் – விசேஷித்த தாலந்துகள் – யாவை? ____________________

   ____________________

   ____________________

2. உங்கள் விசுவாசத்தின் மூலம் நீங்கள் இயேசு கிறிஸ்துவுடனும், ஆவிக்குரிய விதத்தில் மற்ற எல்லா உண்மைக் கிறிஸ்தவர்களுடனும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். அதே சமயம், ஒரு உள்ளூர் சபையில் இணைவதற்கான வழிமுறைகளையும் நீங்கள் அறிய வேண்டும். இந்த ஐக்கியம் மிக முக்கியமானது, கிறிஸ்தவர்கள் அனைவரும் கூடுமான எல்லா வழிகளிலும் ஒன்று சேர்ந்து செயல்படும் அளவிற்கு சபையின் பணி மிகப்பெரியது. உங்கள் சபை மற்றும் போதகரின் உதவியுடன் தொடர்ந்து நீங்கள் கிறிஸ்துவுக்குள் வளருவீர்கள். நான் சபையில் இணைவதற்கான சில காரணங்கள்: ____________________

   ____________________

   ____________________

   ____________________

   ____________________

   ____________________

### மனப்பாட வசனம்

*"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்."*
*(எபிரெயர் 10:25)*

## என் ஆவிக்குரிய குறிப்பேடு

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

இந்தப் பாடங்களை நிறைவு செய்ததற்காக உங்களைப் பாராட்டுகிறோம்! தேவனுக்காகப் பயணத்தைத் தொடரும் உங்களுக்கு இன்னும் பல அருமையான நாட்கள் காத்திருக்கின்றன!

# விசேஷித்த பாராட்டு

பெயர்

## வாலிபருக்கான அடிப்படை வேதபாடத்தை நிறைவு செய்துள்ளார்

போதகர்

பாடப் பங்காளர்

நாள்

உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

1 தீமோத்தேயு 4:12

# முன்னேற்ற அறிக்கை

பெயர் ______________________

தொடர்புத் தகவல் ______________________

______________________

______________________

நாள் ______________________

| பாட எண் | மாற்றமடைந்த நாள் | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

## பாடம் 1

*இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். வெளிப்படுத்தின*

விசேஷம் 3:20

## பாடம் 2

*மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.*

1 கொரிந்தியர் 10:13

## பாடம் 3

*நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

சங்கீதம் 119:11

## பாடம் 4

*இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.*

யோவான் 16:24

## பாடம் 5

*ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.*

1 கொரிந்தியர் 10:31

## பாடம் 6

***"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார்.***

மத்தேயு 4:19

## பாடம் 7

*சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய"கர்த்தராகிய"இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

1 தெசலோனிக்கேயர் 5:23

## பாடம் 8

*சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*

எபிரெயர் 10:25